செய்தி வெளியீடு எண் : 181 நாள் : 27.01.2023

**தொழிற் பயிற்சி நிலைய சான்றிதழ் பெற்றவர்கள் 10ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்புக்கு இணையான சான்றிதழ் பெற விண்ணப்பித்தல்**

அரசாணை (நிலை) எண்.34, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(எஸ்.1)துறை நாள். 30.03.2022–ன்படி 8ம் வகுப்பு தேர்ச்சியுடன் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று NTC/ NAC பெற்றவர்கள் 10ம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கில மொழி பாடங்களில் தேர்ச்சி பெற்றால் 10ம் வகுப்புக்கு இணையான சான்றிதழும் 10ம் வகுப்பு தேர்ச்சியுடன் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று NTC/ NAC பெற்றவர்கள் 11 மற்றும் 12ம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கில மொழி பாடங்களில் தேர்ச்சி பெற்றால் 12ம் வகுப்புக்கு இணையான சான்றிதழும் வழங்கப்படும் என ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, அரசு தேர்வுகள் இயக்ககத்தால் ஆகஸ்ட் 2022– ல் நடத்தபெற்ற மொழித்தேர்வில் தனித்தேர்வர்களாக கலந்து கொண்டு தேர்ச்சி பெற்ற தொழிற் பயிற்சி நிலைய சான்றிதழ் பெற்றவர்கள் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்புக்கு இணையான சான்றிதழ் பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்ப படிவம், முழு விவரங்கள் அடங்கிய நிலையான வழிகாட்டுதல் (SOP) ஆகியவை www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அதனை பின்பற்றி விண்ணப்பதாரரின் மாவட்டத்தில் உள்ள கீழ்க்காணும் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு நேரில் சென்றோ அல்லது தபால் மூலமாகவோ 28.02.2023 தேதிக்குள் உரிய விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

| வ. எண் | மாவட்டம் | அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் | வ. எண் | மாவட்டம் | அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | கிண்டி | 20 | கன்னியாகுமரி | நாகர்கோவில் |
| 2 | செங்கற்பட்டு | செங்கற்பட்டு | 21 | தென்காசி | தென்காசி |
| 3 | திருவள்ளூர் | அம்பத்தூர் | 22 | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 4 | வேலூர் | வேலூர் | 23 | தூத்துக்குடி | தூத்துக்குடி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | இராணிப்பேட்டை | அரக்கோணம் | 24 | விருதுநகர் | விருதுநகர் |
| 6 | கோவை | கோவை | 25 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |
| 7 | ஈரோடு | ஈரோடு | 26 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 8 | கரூர் | கரூர் | 27 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 9 | நீலகிரி | குன்னூர் | 28 | திருவாரூர் | நீடாமங்கலம் |
| 10 | திருப்பூர் | திருப்பூர் | 29 | திருச்சி | திருச்சி |
| 11 | திண்டுக்கல் | திண்டுக்கல் | 30 | கடலூர் | கடலூர் |
| 12 | மதுரை | மதுரை | 31 | பெரம்பலூர் | பெரம்பலூர் |
| 13 | இராமநாதபுரம் | பரமக்குடி | 32 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 14 | சிவகங்கை | சிவகங்கை | 33 | கள்ளக்குறிச்சி | உளுந்தூர்பேட்டை |
| 15 | தேனி | தேனி | 34 | விழுப்புரம் | திண்டிவனம் |
| 16 | தருமபுரி | தருமபுரி | 35 | அரியலூர் | அரியலூர் |
| 17 | கிருஷ்ணகிரி | ஓசூர் | 36 | மயிலாடுதுறை | நாகப்பட்டினம் |
| 18 | நாமக்கல் | நாமக்கல் | 37 | திருப்பத்தூர் | வாணியம்பாடி |
| 19 | சேலம் | சேலம் | 38 | காஞ்சிபுரம் | ஒரக்கடம் |

**ஆணையர்**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in